EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# சென்னை-இலங்கை சுற்றுலா போக்குவரத்துக் கப்பல் சேவை

## மத்திய அமைச்சர் தொடங்கி வைத்தார்

**திருவொற்றியூர், ஜூன் 5:** சென்னை - இலங்கை இடையிலான சர்வதேச சுற்றுலா கப்பல் போக்குவரத்து சேவையை மத்திய துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால் சென்னையில் திங்கள்கிழமை தொடங்கி வைத்தார்.

சென்னை, எண்ணூர் காமராஜர் துறைமுகங்களில் கடந்த நிதியாண்டில் சிறப்பாக செயல்பட்ட நிறுவனங்களுக்கு, பாராட்டு விழா சென்னை கிண்டியில் உள்ள நட்சத்திர விடுதியில் திங்கள்கிழமை நடைபெற்றது. துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், மத்திய அமைச்சர் சர்வானந்த சோனோவால் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு துறைமுகங்களின் வளர்ச்சி விகிதத்தை உயர்த்துவதற்கு காரணமாக இருந்த தனியார் நிறுவனங்களை பாராட்டி கேடயங்களையும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்.

**சொகுசு கப்பல் சேவை தொடக்கம்:** சென்னை துறைமுகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சென்னை, இலங்கையின் அம்பாந்தோட்டை, திரிகோணமலை, காங்கேசன்துறை ஆகிய துறைமுகங்கள் இடையே பயணிக்கவுள்ள எம்.வி.எம்பிரஸ் என்ற சர்வதேச சுற்றுலா பயணிகள் சொகுசுக் கப்பலை அமைச்சர் சர்வானந்த சோனோவால் தொடங்கி வைத்தார். இந்த கப்பல் கால இடைவெளியின்றி தொடர்ந்து இயக்கப்படும்.

தொடர்ச்சியாக, சுற்றுலா பயணிகளுக்கான சொகுசு கப்பலை இயக்குவது என்பது சென்னை துறைமுக வரலாற்றில் முதல் முறையாக செயல்படுத்தப்பட்டுள்ளது.

**கட்டணம்:** சுமார் 1600 பேர் பயணம் செய்யக்கூடிய இக்கப்பலில் குறைந்தபட்சம் ரூ.1.06 லட்சம் முதல் அதிகபட்சம் ரூ.4.37 லட்சம் வரை பயணக்கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதியாண்டில் சுமார் 4 மாதங்கள் இயக்கப்பட்ட தனியார் சுற்றுலா பயணிகள் சொகுசு கப்பல் 37 முறை இயக்கப்பட்டதுடன், சுமார் 85 ஆயிரம் பேர் அதில் பயணம் செய்துள்ளனர் என சென்னை துறைமுகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் சென்னை துறைமுக துணைத் தலைவர் எஸ்.விஸ்வநாதன், எண்ணூர் காமராஜர் துறைமுக பொது மேலாளர் சஞ்சய்குமார் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



சென்னையிலிருந்து இலங்கையின் அம்பாந்தோட்டை, திரிகோணமலை, காங்கேசன்துறை ஆகிய மூன்று துறைமுகங்களை இணைக்கும் வகையில் 'எம்.வி.எம்பிரஸ் என்ற சர்வதேச சுற்றுலா பயணிகள் சொகுசுக் கப்பலை சென்னை துறைமுகத்தில் திங்கள்கிழமை கொடியசைத்துத் தொடங்கிவைத்த மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிப்பாதை துறை அமைச்சர் சர்வானந்த சோனோவால். உடன் சென்னை துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால், துணைத் தலைவர் ஏஸ்.விஸ்வநாதன் உள்ளிட்டோர்.

## நெகிழி மாசுபாடு விழிப்புணர்வு பிரசாரம்

**சென்னை, ஜூன் 5:** உலக சுற்றுச் சூழல் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் நெகிழி பொருள்கள் குறித்து 'நெகிழி மாசுபாட்டை முறியடிப்போம்' எனும் தலைப்பில் விழிப்புணர்வு பிரசாரத்தை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா திங்கள்கிழமை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து விழிப்புணர்வு உறுதிமொழியை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா தலைமையில் மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஏற்றனர்.

தொடர்ந்து, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலைக் குழுவினரின் மூன்று நாள்கள் விழிப்புணர்வு பிரசாரத்தை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மரக்கன்றுகள் அளிப்பு...



உலக சுற்றுச்சூழல் விழிப்புணர்வு தினத்தையொட்டி, ரெஃபெக்ஸ் குழுமம் சார்பில் வழங்கப்பட்ட 10 ஆயிரம் மரக்கன்றுகளை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு திங்கள்கிழமை வழங்கிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின். உடன் மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ஜெ.ராதாகிருஷ்ணன், குழும இயக்குநர் அனில் ஜெயின்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சட்ட ஆணையத்தின் அறிக்கை முதல்வரிடம் அளிப்பு



சென்னை தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து சட்ட ஆணையத்தின் 72 -ஆவது அறிக்கையினை வழங்கிய மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் நீதிபதி (ஓய்வு) நாகப்பன்.

**சென்னை, ஜூன் 5:** சட்ட ஆணையத்தின் அறிக்கையை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், ஆணையத் தலைவர் சி.நாகப்பன் அளித்தார்.

மாநில சட்ட ஆணையம் கடந்த 1994-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதன்பிறகு, கடந்த 2014-இல் மாற்றி அமைக்கப்பட்டது. திருத்தி அமைக்கப்பட்ட, தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் தலைவராக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சி.நாகப்பன் நியமிக்கப்பட்டார்.

2000-இல் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியாகவும், 2002-இல் நிரந்தர நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். 2013-இல் ஒடிஸா மாநில உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும், அதே ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதியாகவும் பணிபுரிந்து கடந்த 2016-இல் அவர் ஓய்வு பெற்றார்.

சட்ட ஆணையத்தின் அலுவலகம் சென்னை கிண்டியில் செயல்பட்டு வந்தது. இந்த நிலையில், சட்ட ஆணையத்தின் 72-ஆவது அறிக்கையை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினிடம், ஆணையத் தலைவர் சி.நாகப்பன் திங்கள்கிழமை அளித்தார்.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# மாறிவரும் சூழலுக்கேற்ற பாடத் திட்டங்கள்

## துணைவேந்தர்கள் மாநாட்டில் ஆளுநர் ரவி வலியுறுத்தல்




உதகையில் நடைபெற்ற பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டில் பேசிய ஆளுநர் ஆர்.என்.ரவி.

**உதகை, ஜூன் 5:** மாறிவரும் சூழலுக்கேற்ப நமது பாடத் திட்டங்கள் அமைய வேண்டும் என்று துணைவேந்தர்கள் மாநாட்டில் ஆளுநர் ஆர்.என்.ரவி வலியுறுத்தினார்.

நீலகிரி மாவட்டம், உதகையில் உள்ள ஆளுநர் மாளிகையில் திங்கள்கிழமை நடைபெற்ற பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் மாநாட்டை தொடங்கிவைத்து ஆளுநர் ஆர்.என். ரவி பேசியதாவது:

சுதந்திரத்துக்குப் பின்னர் காமராஜர் போன்ற தலைவர்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்தனர். அதன் பின்னர் வந்த அரசுகளும் இதைத் தொடர்ந்ததால் அதிக எண்ணிக்கையிலான மக்கள் கல்வி கற்றனர். அதன் பலனால் நாட்டிலேயே முன்னிலை பெற்ற மாநிலமாக தமிழகம் ஆனது.

ஆனால் இன்றைய நிலை என்ன? பல விஷயங்களில் முதலிடத்தில் இருந்து 5, 6-ஆம் இடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளோம். நமது மாநிலத்தில் கல்வி பரவலாக்கம் அபாரமானது. மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய சராசரியைவிட இருமடங்காக உள்ளது. எனினும், இன்றைய தேவைக்கேற்ப கல்வி உள்ளதா என்பது கேள்விக்குறியாகும்.

**குறைந்த ஊதியத்தில்...:** பட்டப் படிப்பு படித்தவர்கள், அவர்களது படிப்புக்கேற்ற பணியைப் பெறுவதில்லை. பொறியியல் பட்டதாரிகளைவிட நல்ல பணிகளை பாலிடெக்னிக்கில் படிப்பவர்கள் பெறுகிறார்கள். கல்லூரிகளில் கற்பிக்கும் பேராசிரியர்கள் தினக்கூலியைப்போல மாதம் ரூ.15-20 ஆயிரம் ஊதியம் பெறுகின்றனர்.

பல மாநிலங்களை ஒப்பிடும் போது நாம் முன்னணியில் இருந்தாலும், காலத்தின் தேவைக்கேற்ற கல்வியை அளிக்காததால்தான் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதற்குத் தீர்வாக, பல்துறைகளில் திறமையை வளர்த்துக் கொள்வதை தேசிய கல்விக் கொள்கை (2020) வலியுறுத்துகிறது. பல்கலைக்கழகங்கள் தன்னாட்சி பெற்றவை. அதன் வரம்புக்குள், காலத்துக்கேற்ப நமது மாணவர்களை உருவாக்கும் வகையில் பல முயற்சிகளை மேற்கொள்ள முடியும்.

**தாய்மொழியில் கல்வி:** அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல், கணிதம் போன்றவற்றைப் படிக்க ஆங்கிலம் முக்கியமானது என ஆழ் மனதில் நம்பிக்கையை உண்டாக்கிக் கொண்டு விட்டோம். அதனால் இந்தப் படிப்புகளை இளைஞர்கள் தவிர்க்கின்றனர்.

இதை உணர்ந்த பிரதமர் நரேந்திர மோடி, பள்ளிகளில் மட்டுமல்லாமல் உயர்கல்வியும் தாய்மொழியில் கற்பிக்கப்பட வேண்டும் என்று விருப்பம் கொண்டுள்ளார். இதற்குத் தேவையான புத்தகங்கள் தமிழில் மொழிபெயர்க்கப்பட வேண்டும்.

காலத்துக்கேற்ப கல்வி பற்றி பேசும்போது, சர்வதேச சூழலையும் கருத்தில் கொள்ள வேண்டும். பெரும்பாலான தொழில்நுட்ப நிறுவனங்கள் சீனாவில் இருந்து வெளியேறி வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளில் அடிப்படை கட்டமைப்புகள் மேம்பாடு, அதிகரித்த மின்சார உற்பத்தி, கற்றுச்சூழல், எண்மமயமாக்கம் (டிஜிட்டல்) போன்றவற்றால் இந்த நிறுவனங்கள் இந்தியாவை நம்பிக்கையுடன் எதிர்நோக்குகின்றன.

**முதலீட்டாளர்களை ஈர்க்க...:** நாம் வேண்டுகோள் விடுப்பதாலோ அல்லது அவர்களது நாடுகளுக்கு சென்று பேசுவதாலோ மட்டும் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். முதலீடு செய்வதற்கேற்ற சூழலும், திறன்பெற்ற மனித ஆற்றலும் இருந்தால்தான் முதலீட்டாளர்கள் முன்வருவார்கள்.

அந்நிய முதலீடுகளை ஈர்க்க நமது நாட்டில் பல மாநிலங்கள் அதுபோன்று திறனுடன் செயல்படுகின்றன. தமிழகத்துக்கு இணையாக ஹரியாணா நேரடி அந்நிய முதலீட்டை ஈர்த்துள்ளது. அத்தகைய நிறுவனங்களை ஈர்க்கும் சூழலையும், திறன்மிக்க நபர்களையும் நமது மாநிலத்திலும் உருவாக்க வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், பல்கலைக்கழக மானிய குழுத் தலைவர் ஜெகதீஷ் குமார் இணையவழி மூலம் உரையாற்றினார். பாரதிய பாஷா சமிதி தலைவர் சாமு கிருஷ்ண சாஸ்திரி, அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி கவுன்சில் தலைமை ஒருங்கிணைப்பு அதிகாரி புத்தா சந்திரசேகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஆளுநரின் முதன்மைச் செயலர் ஆனந்த் வி. பாட்டீல் வரவேற்றார்.

25-க்கும் மேற்பட்ட அரசு மற்றும் தனியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் பங்கேற்ற இந்த மாநாட்டில் உயர் கல்வி நிறுவன பாடப் புத்தகங்களைத் தமிழாக்கம் செய்வது குறித்து விவாதிக்கப்பட்டது. மாநாட்டின் தொடக்கத்தில் தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து, பாரதியாரின் பாடல்கள் பாடப்பட்டன.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

## தேசிய தரவரிசை

# சென்னை மருத்துவக் கல்லூரிக்கு 11–ஆவது இடம்

**சென்னை, ஜூன் 5:** தரமான கல்வியை அளிப்பதில் தேசிய அளவில் சிறந்து விளங்கும் கல்லூரிகளுக்கான தர வரிசைப் பட்டியலில் சென்னை மருத்துவக் கல்லூரி 11-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

மத்திய கல்வி அமைச்சகம் ஆண்டுதோறும் சிறப்பாக செயல்படும் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை பல பிரிவுகளின் கீழ் தரவரிசைப்படுத்தி பட்டியல் வெளியிடுகிறது.

அதன்படி, நிகழாண்டு தரவரிசைப் பட்டியலில் சென்னை மருத்துவக் கல்லூரி 11-ஆவது இடத்தை பிடித்துள்ளது. மேலும், மாநில அரசால் நடத்தப்படும் மருத்துவக் கல்லூரிகளில் முதலிடம் பெற்றுள்ளது. முதல் 50 இடங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 8 மருத்துவக் கல்லூரிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 7 தனியார் மருத்துவக் கல்லூரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து சென்னை மருத்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் எ.தேரணிராஜன் கூறியதாவது: தேசிய தரவரிசைப் பட்டியலைப் பொருத்தவரை கடந்த மூன்று ஆண்டுகளாக சென்னை மருத்துவக் கல்லூரி முன்னேறி வருகிறது. 2021-ஆம் ஆண்டில் 16-ஆவது இடத்திலும், கடந்த ஆண்டில் 12-ஆவது இடத்திலும் இருந்த சென்னை மருத்துவக் கல்லூரி, தற்போது மேலும் ஓரிடம் முன்னேறியுள்ளது. இது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கும் இது உத்வேகத்தை அளிக்கும் என்றார் அவர்.

1835-ஆம் ஆண்டு பிப். 13-ஆம் தேதி சென்னை மருத்துவப் பள்ளி தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1850-ஆம் ஆண்டு அக். 1-ஆம் தேதி சென்னை மருத்துவப் பள்ளி சென்னை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# இந்தோ-பசிபிக் பிராந்தியத்துக்கு இந்தியா-அமெரிக்கா நல்லுறவு முக்கியம்

**புது தில்லி, ஜூன் 5:** இந்தோ-பசிபிக் பிராந்தியம் சுதந்திரமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் திகழ்வதற்கு இந்தியா-அமெரிக்கா இடையேயான நல்லுறவு முக்கியம் எனப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

இருநாள் அரசுமுறைப் பயணமாக இந்தியாவுக்கு வருகை தந்துள்ள அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டினுடன் அமைச்சர் ராஜ்நாத் சிங் திங்கள்கிழமை பேச்சுவார்த்தை நடத்தினார். அதையடுத்து இருவரும் இணைந்து செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறுகையில், 'பல்வேறு துறைகளில் இருதரப்பு நல்லுறவை வலுப்படுத்துவதற்காக அமெரிக்காவுடன் நெருங்கிப் பணியாற்றுவதை இந்தியா எதிர்நோக்கியுள்ளது.

இந்தோ-பசிபிக் பிராந்தியமானது சுதந்திரமாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் சர்வதேச விதிகளின்படி திகழ்வதையும் உறுதி செய்வதற்கு இந்தியா-அமெரிக்கா இடையேயான நல்லுறவு மிகவும் முக்கியமானது' என்றார்.

அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் கூறுகையில், 'ராணுவத் தளவாடங்களை இந்தியாவிலேயே உற்பத்தி செய்வதற்கான வழிகாட்டுத் திட்டத்தை இந்தியாவும் அமெரிக்காவும் இறுதி செய்துள்ளன. ராணுவத் தளவாடங்கள் உற்பத்தியை அதிகரிப்பதில் ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதற்கு அத்திட்டம் உதவும். பாதுகாப்புசார் தொழில் நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கும் அத்திட்டம் உதவும்.

இந்தோ-பசிபிக் பிராந்தியம் சுதந்திரமாகத் திகழ்வதற்கு இந்தியா-அமெரிக்கா சர்வதேச நல்லுறவு முக்கியத்துவம் வாய்ந்தது. இந்த விவகாரத்தில் அமைச்சர் ராஜ்நாத் சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவல் ஆகியோருடனான சந்திப்பு ஆக்கபூர்வமாக அமைந்தது.

இருதரப்பு பாதுகாப்பு நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருகிறது. உலகின் மிகப் பெரும் சக்திகளாகத் திகழும் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே மேம்பட்டு வரும் பாதுகாப்பு நல்லுறவு, சர்வதேச நலனுக்குப் பலனுள்ளதாக இருக்கும்.

சீனா, ரஷியாவின் ஆதிக்கத்தை உலகம் எதிர்கொண்டு வருகிறது. அவ்விரு நாடுகளும் அண்டை நாடுகளுடனான எல்லையை மாற்ற முயல்வதோடு தேசிய இறையாண்மைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. சர்வதேச சூழல் மாறிவரும் நிலையில், இந்தியா-அமெரிக்கா இடையே வலுவான பாதுகாப்பு நல்லுறவு நிலவ வேண்டியது அவசியமாக உள்ளது' என்றார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்



புது தில்லியில் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்கை சந்தித்த அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாய்ட் ஆஸ்டின்.

**பாதுகாப்பு நல்லுறவு:** அமைச்சர் ராஜ்நாத் சிங் ட்விட்டரில் வெளியிட்ட பதிவில், 'பாதுகாப்புத் துறையில் இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தையின்போது விவாதிக்கப்பட்டது. இருதரப்பு பாதுகாப்பு நல்லுறவை வலுப்படுத்துவதற்கு இந்தப் பேச்சுவார்த்தை உதவும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பாதுகாப்புத் துறையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாட்டை அதிகரிப்பது, பிராந்திய, சர்வதேச பாதுகாப்பு விவகாரங்கள் உள்ளிட்டவை குறித்தும் அமைச்சர்கள் விரிவாக விவாதித்ததாகப் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதுகாப்புத் துறையில் இரு நாடுகளுக்கு இடையே நிலவும் பலதரப்பட்ட நல்லுறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக அவர்கள் விவாதித்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆக்கபூர்வமான சந்திப்பு:** தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜீத் தோவலையும் அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்டு ஆஸ்டின் சந்தித்துப் பேசினார். அந்தச் சந்திப்பு ஆக்கபூர்வமாக இருந்ததாக அமைச்சர் ஆஸ்டின் குறிப்பிட்டார்.

பொதுவான விருப்பங்களுக்காகவும் பரஸ்பர மதிப்புகளுக்காகவும் உலகின் மிகப் பெரும் இரு ஜனநாயக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அமைச்சர் ஆஸ்டின் குறிப்பிட்டார்.

**வலுவடையும் நல்லுறவு:** இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பாதுகாப்பு நல்லுறவு அண்மைக் காலமாக அதிகரித்து வருகிறது. அமெரிக்காவில் இருந்து ராணுவத் தளவாடங்கள் இறக்குமதியை இந்தியா அதிகரித்து வருகிறது.

எம்க்யூ-9பி தாக்குதல் ட்ரோன்கள், போர் விமானங்களின் என்ஜின்கள் உள்ளிட்டவற்றை அமெரிக்காவிடம் இருந்து கொள்முதல் செய்ய இந்தியா முடிவெடுத்துள்ளது.

அமெரிக்காவிடம் இருந்து தொழில்நுட்பப் பரிமாற்றம் மூலமாக போர் விமானங்களை இந்தியாவிலேயே தயாரிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 2016-ஆம் ஆண்டில் இந்தியாவை 'முக்கிய பாதுகாப்பு கூட்டாளி' நாடாக அமெரிக்கா அறிவித்தது. இந்தியாவும் அமெரிக்காவும் பரஸ்பரம் ராணுவத் தளங்களை பயன்படுத்திக் கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த 2016-ஆம் ஆண்டில் கையொப்பமானது.

இரு நாட்டு ராணுவங்களும் தங்களுக்கு இடையே முக்கியத் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒப்பந்தம் கடந்த 2018-ஆம் ஆண்டில் கையொப்பமானது.

ராணுவத் தொழில்நுட்பம், சரக்கு கையாளுகை, புவிசார் வரைபடங்கள் உள்ளிட்ட முக்கிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கான ஒப்பந்தம் இரு நாடுகளிடையே கடந்த 2020-ஆம் ஆண்டில் கையொப்பமானது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# ஈர நிலங்களின் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புக்கு ரூ.115 கோடி

## அமைச்சர் மதிவேந்தன் தகவல்

**சென்னை, ஜூன் 5:** தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம் சார்பில் 100 ஈர நிலங்களில் சுற்றுச்சூழல் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ரூ.115.15 கோடியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளதாக வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

வண்டலூரர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா வளாகத்திலுள்ள ஓட்டேரி ஏரியில் உலக சுற்றுச்சூழல் நாள் விழாவையொட்டி தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம் தொடக்க விழா திங்கள்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில், வனத் துறை அமைச்சர் மா.மதிவேந்தன், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடக்க விழாவின் அடையாளமாக ஓட்டேரி ஏரியின் சுற்றுச்சூழல் சீரமைப்புப் பணிகளை தொடங்கி வைத்து மரக்கன்றுகளை நட்டு வைத்தார்கள்.

பின்னர் நிகழ்ச்சியில் அமைச்சர் மதிவேந்தன் பேசியது:

தமிழ்நாட்டில் 100 சதுப்பு நிலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை சதுப்பு நிலத்துக்கு சொந்தமான துறைகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உள்ளூர் சமூகங்கள், மாணவர்கள் போன்றவர்களுடன் கலந்தாலோசித்து ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டத்தின் அடிப்படையில்வரைபடமாக்கப்பட்டு, சூழலியல் ரீதியாக மீட்டெடுக்கப்படும்.

20 ஆண்டுகளுக்குப் பிறகு 13 புதிய ராம்சார் தளங்களை தமிழகம் பெற்றுள்ளது.

நாட்டில் மொத்தம் உள்ள 75-இல் 14 ராம்சார் தளங்களை தமிழகம் பெற்றுள்ளது என்றார் அவர்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலர் சுப்ரியா சாகு, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ஆ.ர.ராகுல் நாத், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் (வனத் துறை தலைவர்) சுப்ரத் மஹாபத்ர, கூடுதல் முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு ஈர நில இயக்கம் தீபக் ஸ்ரீ வஸ்தவா, செங்கல்பட்டு சட்டப்பேரவை உறுப்பினர் ம.வரலட்சுமி மதுசூதனன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# வளர்ந்த நாடுகளிடம் பருவநிலை நீதி விவகாரத்தை இந்தியா எழுப்பி வருகிறது

**புது தில்லி, ஜூன் 5:** 'சில வளர்ந்த நாடுகளின் தவறான கொள்கைகளுக்கு வளரும் நாடுகள் விலை கொடுத்து வருகின்றன. வளர்ந்த நாடுகளிடம் பருவநிலை நீதி விவகாரத்தை இந்தியா எழுப்பி வருகிறது' என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இது தொடர்பாக உலக சுற்றுச் சூழல் விழிப்புணர்வு தின நிகழ்வையொட்டி அவர் வெளியிட்ட விடியோ பதிவில் கூறியிருப்பதாவது:

உலக பருவநிலையைக் காப்பதற்கு அனைத்து நாடுகளும் கூட்டாகச் சிந்திப்பதும், சுயநோல நோக்கங்களைக் கடந்து செயல்படுவதும் அவசியமாகும்.

நீண்ட காலமாக பெரிய மற்றும் முன்னேறிய நாடுகளில் வளர்ச்சி மாதிரி என்பது முரண்பட்டதாக உள்ளது. இந்த வளர்ச்சி மாதிரியில் 'நாம் முதலில் நமது நாட்டை முன்னேற்றுவோம்; அதன் பிறகு சுற்றுச்சூழலைக் குறித்து சிந்திப்போம்' என்பதே சிந்தனையாக உள்ளது. இதன் மூலம் அந்த நாடுகள் வளர்ச்சி இலக்குகளை எட்டிவிட்டன. ஆனால் அவர்களின் வளர்ச்சிக்காக உலக சுற்றுச்சூழல் விலை கொடுத்து வருகிறது.

இன்றும் கூட சில வளர்ந்த நாடுகளின் தவறான கொள்கைகளுக்கு வளரும் நாடுகள்தான் விலை கொடுத்து வருகின்றன.

பிரதமர் மோடி



சில வளர்ந்த நாடுகளின் இந்த அணுகுமுறை தொடர்பாக நீண்ட காலமாக யாரும் ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. எனினும் இந்த நாடுகளிடம் பருவநிலை நீதி விவகாரத்தை இந்தியா எழுப்பி வருகிறது.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தொடர்ந்து வரும் இந்திய கலாசாரத்தில் இயற்கை, வளர்ச்சி ஆகியஇரண்டுக்கும்முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. சூழலியலுக்கும் பொருளாதாரத்துக்கும் இந்தியா கவனம் செலுத்தி வந்துள்ளது.

முன்னெப்போதும் இல்லாத அளவில் உள்கட்டமைப்புத் திட்டங்களில் இந்தியா தற்போது முதலீடு செய்து வருகிறது. அதேசமயம் சுற்றுச்சூழல் மீதும் கவனம் செலுத்தி வருகிறது. ஒருபுறம் 4ஜி, 5ஜி தகவல் தொடர்பு விரிவாக்கப்பட்டுள்ளது. மறுபுறம் நாட்டின் வனப்பரப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஏழைகளுக்காக 4 கோடி வீடுகள் கட்டப்பட்டுள்ளன. அதேவேளையில் வன உயிரியல் சரணாலயங்களின் எண்ணிக்கை சாதனை அளவில் உயர்ந்துள்ளது. நீர்ப் பாதுகாப்புக்காக 50,000 அமிர்த சரோவர்கள் கட்டப்பட்டுள்ளன. உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உயர்ந்துள்ளது. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, விவசாய விளை பொருட்கள் ஏற்றுமதியில் அதிகரிப்பு ஆகிய விவகாரங்களில் ஐந்து பெரிய நாடுகளுடன் இந்தியாவும் இணைந்துள்ளது. பெட்ரோலில் 20 சதவீத எத்தனாலைக் கலப்பது தொடர்பாக இந்தியா பிரசார இயக்கத்தை நடத்தி வருகிறது.

மிஷன் லைஃப் போன்ற இயக்கங்கள் பொதுமக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளன. இந்த இயக்கம் கடந்த ஆண்டு குஜராத்தின் கேவடியா நகரில் தொடங்கியபோது மக்களிடையே அது பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் எழுந்தது. ஒரு மாதத்துக்கு முன் இந்த இயக்கம் தொடர்பாக திட்டம் தொடங்கப்பட்டபோது 30 நாள்களுக்குள் அதில் 2 கோடி பேர் இணைந்தனர்.

லட்சக்கணக்கானவர்கள் தங்கள் வாழ்வில் பொருள்களை மறுபயன்பாடு செய்யும் உத்தியைப் பின்பற்றத் தொடங்கினர். பருவநிலை மாற்றம் தொடர்பான விழிப்புணர்வு இந்தியாவில் மட்டுமின்றி உலகெங்கும் அதற்கான ஆதரவு அதிகரித்து வருகிறது.

இந்த ஆண்டு சுற்றுச்சூழல் தினத்தின் கருத்தாக்கமாக ஒரு முறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருள்களைத் தவிர்ப்பது என்ற அம்சம் உள்ளது. இந்த நோக்கில் இந்தியா கடந்த நான்கு, ஐந்து ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறது.

ஒருபுறம் ஒருமுறை பயன்படுத்தக் கூடிய பிளாஸ்டிக் பொருள்களுக்கு தடை விதித்ததுடன் மறுபுறம் பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்வதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால் இந்தியாவில் 30 லட்சம் டன் பிளாஸ்டிக் கழிவுகள் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. இது இந்தியாவின் வருடாந்திர பிளாஸ்டிக் கழிவுகளில் 75 சதவீதமாகும்.

21ஆம் நூற்றாண்டில் இந்தியா பருவநிலை மாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான செயல்திட்டத்துடன் இயங்கி வருகிறது என்றார்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# தென் கொரிய இரும்பு உலோகக் கலவைக்கு இறக்குமதி வரி

## மத்திய வர்த்தக அமைச்சகம் பரிந்துரை

**புது தில்லி, ஜூன் 5:** தென் கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஃபெர்ரோ மாலிப்டினம் உலோகக் கலவைக்கு 2 ஆண்டுகளுக்கு இறக்குமதி வரி விதிக்க மத்திய வர்த்தக அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

இந்தியாவுக்கும் தென் கொரியாவுக்கும் இடையேயான விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் கடந்த 2010-ஆம் ஆண்டு ஜனவரியில் கையொப்பமானது. அந்த ஒப்பந்தத்தின் மூலமாக, தென் கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குக் குறைந்த அளவிலான வரியே விதிக்கப்பட்டு வருகிறது.

அந்நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஃபெர்ரோ மாலிப்டினம் உலோகக் கலவையானது எஃகு, நிக்கல், கோபால்ட் உள்ளிட்டவை தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தென் கொரியாவில் இருந்து ஃபெர்ரோ மாலிப்டினம் உலோகக் கலவையானது அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுவதால், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்தது.

இது தொடர்பாக மத்திய வர்த்தக அமைச்சகத்தின் கீழ் செயல்படும் வர்த்தகக் குறைதீர் இயக்குநரகம் (டிஜிடிஆர்) கடந்த ஆண்டு அக்டோபரில் விசாரணையைத் தொடங்கியது. அந்த இயக்குநரகம் தனது விசாரணை அறிக்கையை அண்மையில் தாக்கல் செய்தது. அதில், தென் கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஃபெர்ரோ மாலிப்டினத்தின் அளவு அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இறக்குமதி வரி நீக்கப்பட்டுள்ளதால், அதன் இறக்குமதி அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தென் கொரியாவில் இருந்து ஃபெர்ரோ மாலிப்டினம் உலோகக் கலவையின் இறக்குமதி அதிகரித்துள்ளதால், உள்நாட்டு உற்பத்தியாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். உள்நாட்டு உற்பத்தியாளர்களின் லாபமும் குறைந்துள்ளது. அதைக் கருத்தில்கொண்டும், இருதரப்பு வர்த்தக நல்லுறவை மேம்படுத்தும் வகையிலும் ஃபெர்ரோ மாலிப்டினம் மீது இறக்குமதி வரி விதிக்க டிஜிடிஆர் பரிந்துரைத்துள்ளது. தென் கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஃபெர்ரோ மாலிப்டினம் உலோகக் கலவைக்கு 2 ஆண்டுகளுக்கு இறக்குமதி வரி விதிக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

முதலாண்டில் 100 சதவீத இறக்குமதி வரி விதிக்கவும், இரண்டாவது ஆண்டில் அதை 75 சதவீதமாகக் குறைக்கவும் டிஜிடிஆர் பரிந்துரைத்துள்ளது. குறிப்பிட்ட பொருள்களுக்கு இறக்குமதி வரி விதிக்க இந்தியா-தென் கொரியா வர்த்தக ஒப்பந்தத்தில் வழிவகுக்கப்பட்டுள்ளது. அந்த விதியின் கீழ் ஃபெர்ரோ மாலிப்டினம் மீது இறக்குமதி வரி விதிக்கப்பட்டுள்ளது.

இந்த இறக்குமதி வரியானது உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு சம அளவிலான போட்டியை ஏற்படுத்தும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென் கொரியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஃபெர்ரோ மாலிப்டினம் உலோகக் கலவைக்கு இறக்குமதி வரி விதிப்பது தொடர்பாக மத்திய நிதியமைச்சகம் இறுதி முடிவெடுக்கும்.

# இந்தியாவின் வளர்ச்சி தடுக்க முடியாதது

## வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்

**விண்ட்ஹோக், ஜூன் 5:** சர்வதேச அளவில் இந்தியாவின் வளர்ச்சி தடுக்க முடியாதது எனத் தெரிவித்துள்ள வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், இந்தியா தனக்கான இடத்தைப் பிடித்து வருவதாகக் கூறியுள்ளார்.

ஆப்பிரிக்க நாடான நமீபியாவுக்கு வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ளார். தென்னாப்பிரிக்காவில் பிரிக்ஸ் கூட்டத்துக்குப் பிறகு அவர் நமீபியா வந்தார். நமீபியாவுக்குப் பயணம் செய்யும் முதல் இந்திய வெளியுறவு அமைச்சர் என்ற பெருமையை ஜெய்சங்கர் பெற்றுள்ளார். அந்நாட்டில் வசிக்கும் இந்திய வம்சாவளியினரை தலைநகர் விண்ட்ஹோக்கில் அவர் ஞாயிற்றுக்கிழமை சந்தித்து உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வலுவாக உள்ளது. மற்ற நாடுகளுடனான இந்தியாவின் நல்லுறவும் வலுவாக உள்ளது. உலகெங்கும் வாழும் இந்திய வம்சாவளியினர் தாயகத்துக்குத் தொடர் ஆதரவு நல்கி வருகின்றனர். சர்வதேச அளவில் இந்தியாவின் வளர்ச்சி தடுக்க முடியாததாக மாறியுள்ளது. சர்வதேச அரங்கில் தனக்கான இடத்தை இந்தியா உறுதிசெய்து வருகிறது.

பலவகைகளில் இந்தியா தற்போது திறன்மிக்க நாடாக விளங்குகிறது. பெரும் நம்பிக்கையுடன் இந்தியா நடைபோட்டு வருகிறது. சர்வதேச அளவில் இந்தியாவுக்கான அங்கீகாரம் அதிகரித்து வருகிறது. இந்தியா தற்போது சரியான வழியில் பயணம் மேற்கொண்டு வருகிறது. அந்தப் பயணத்தில் பல்வேறு சவால்கள் உள்ளதை இந்தியா அறிந்திருக்கிறது.

உலகின் அதிக மக்கள்தொகை கொண்ட நாடாகத் திகழும் இந்தியா, 5-ஆவது பெரும் பொருளாதார சக்தியாகத் திகழ்கிறது. விரைவில் 3-ஆவது பெரும் பொருளாதார சக்தியாக இந்தியா மாறும்.

சர்வதேச அளவில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்து வருவது அனைத்து இந்தியர்களுக்கும் பெருமைமிகு தருணமாகும். அந்த மதிப்பால் வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் பெரும் பலனடைந்து வருகின்றனர்.

**உலக நாடுகள் ஆதரவு:** ஒடிஸா ரயில் விபத்தில் உயிரிழந்தவர்களுக்காக உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்தனர். இது இந்தியாவின் மீது அவர்கள் கொண்டுள்ள மதிப்பை வெளிக்காட்டுகிறது.

இந்தியாவுடன் நெருங்கிய நல்லுறவைப் பேணவே உலக நாடுகள் விரும்புகின்றன. இந்தியாவில் நடந்த விபத்தின் பின்னணியில் இந்தியாவுக்கு ஆதரவளிக்க உலக நாடுகள் பெருவாரியாக முன்வருகின்றன.

இந்தியாவுக்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையேயான நல்லுறவு பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது. ஆப்பிரிக்காவுடனான நல்லுறவை வலுப்படுத்துவதில் பொறுப்பான கூட்டாளி நாடாக இந்தியா தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்தியாவுக்கும் நமீபியாவுக்கும் இடையேயான நல்லுறவு சிறப்புமிக்கதாக உள்ளது. சிவிங்கிப் புலிகளை (சீட்டா) இந்தியாவுக்குக் கொண்டு செல்லும் திட்டத்தில் முதல் நாடாக நமீபியா இணைந்தது.

சர்வதேச அளவில் புலிகள், சிங்கங்கள், சிவிங்கிப் புலிகளின் பரவலை அதிகரிக்கும் வகையிலான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் இந்தியா முக்கியப் பங்கு வகித்து வருகிறது. நமீபியாவின் எண்மயமாக்கல் வளர்ச்சிக்குத் தேவையான உதவிகளை வழங்க இந்தியா தயாராக உள்ளது என்றார் அவர்.

## நமீபியா துணைப் பிரதமருடன் சந்திப்பு



நமீபியா துணைப் பிரதமர் நெடும்போ நந்திநதைத்வாவை அந்நாட்டு தலைநகர் விண்ட்ஹோக்கில் சந்தித்த வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

நமீபிய துணைப் பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான நெடும்போ நந்திநதைத்வாவை வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் சந்தித்துப் பேசினார்.

எரிசக்தி, பசுமை ஹைட்ரஜன், போக்குவரத்து-தொடர்பு, எண்மமயமாக்கல், மருந்துப் பொருள்கள் உற்பத்தி, உணவுப் பாதுகாப்பு, அறிவியல்-தொழில்நுட்பம், கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு நல்லுறவை மேம்படுத்துவது தொடர்பாக இருவரும் விவாதித்தனர்.

வன உயிரிகள் பாதுகாப்பு, சுற்றுச்சூழல்சார் சுற்றுலா, பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் உள்ளிட்டவை குறித்தும் பன்னாட்டு அமைப்புகளில் ஒருங்கிணைந்து செயல்படுவது தொடர்பாகவும் நமீபிய துணை பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாக அமைச்சர் ஜெய்சங்கர் ட்விட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

# 'மருந்துப் பொருள், தடுப்பூசி உற்பத்தியில் இந்தியா முன்னிலை'

**ஹைதராபாத், ஜூன் 5:** மருந்துப் பொருள் மற்றும் தடுப்பூசி உற்பத்தியிலும், பெருந்தொற்று காலங்களில் அவை தேவைப்படும் நாடுகளுக்கு வழங்குவதிலும் இந்தியா முன்னிலை வகிப்பதாக உலக சுகாதார அமைப்பின் சுகாதார அவசர நிலை திட்டச் செயல் இயக்குநர் மைக்கேல் ரையன் தெரிவித்தார்.

ஜி20 நாடுகளின் சுகாதார குழு கூட்டம் ஜூன் 4- முதல் 6-ஆம் தேதி வரையில் ஹைதராபாதில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்றுள்ள மைக்கேல் ரையன் தெரிவிக்கையில், 'கரோனா போன்ற பெருந்தொற்று காலத்தில் மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், சிறந்த மருந்துப் பொருள்கள், தடுப்பூசிகள் உற்பத்தி செய்யப்படுவதையும், அவை தேவைப்படும் மக்களுக்கு விரைவாக வழங்குவதையும் ஜி20 சுகாதார குழு கூட்டத்தில் விவாதிக்கப்படுகிறது. இவை அனைத்திலும் இந்தியா முன்னிலை வகிக்கிறது.

மருத்துவ அவசர நிலை ஏற்படும்போது ஜி20 நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது குறித்தும் ஆலோசிக்கப்படுகிறது. மருந்து உற்பத்தியிலும், தடுப்பூசி தயாரிப்பிலும் சர்வதேச அளவில் முன்னணி வகிக்கும் இந்தியா, ஜி20-க்கும் தலைமை வகிப்பது சிறப்பானது என்றார்.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# நடால் சாதனையை முறியடித்த ஜோகோவிச்

**பாரீஸ், ஜூன் 5:** நடப்பாண்டின் 2-ஆம் கிராண்ட்ஸ்லாம் போட்டியான பிரெஞ்சு ஓபனில் செர்பியாவின் நோவக் ஜோகோவிச், ஸ்பெயினின் கார்லோஸ் அல்கராஸ், கிரீஸின் ஸ்டெஃபானோஸ் சிட்சிபாஸ் காலிறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றனர்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 4-ஆவது சுற்றில், உலகின் 3-ஆம் நிலைவீரரான ஜோகோவிச் 6-3, 6-2, 6-2 என்ற செட்களில் பெருவின் ஜுவான் பாப்லோவை சாய்த்து காலிறுதிக்கு முன்னேறினார். இதன் மூலம், பிரெஞ்சு ஓபன் போட்டியில் 17 முறை காலிறுதிச்சுற்றுக்கு முன்னேறியே முதல் வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார்.

முன்னதாக அவரும், ஸ்பெயின் நட்சத்திரம் நடாலும் 16 முறை காலிறுதியில் இடம் பிடித்து சமநிலையில் இருந்தனர். இடுப்புப் பகுதி காயம் காரணமாக நடால் இந்த சீசனில் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜோகோவிச் தனது காலிறுதியில், ரஷியாவின் காரென் கச்சனோவை சந்திக்கிறார். மற்றொரு ஆட்டத்தில், உலகின் நம்பர் 1 வீரர் அல்கராஸ் 6-3, 6-2, 6-2 என்ற செட்களில், போட்டித்தரவரிசையில் 17-ஆவது இடத்திலிருந்த இத்தாலியின் லொரென்ஸோ முசெட்டியை வெளியேற்றினார்.

அல்கராஸுடனான காலிறுதியில், கிரீஸின் சிட்சிபாஸ் மோதவிருக்கிறார்.
















உலகின் 5-ஆம் நிலை வீரராக இருக்கும் சிட்சிபாஸ் முந்தைய சுற்றில் 7-5, 6-3, 6-0 என்ற செட்களில் ஆஸ்திரியாவின் செபாஸ்டியன் ஆஃப்னரை வெளியேற்றினார். போட்டித்தரவரிசையில் 4-ஆம் இடத்திலிருக்கும் நார்வேயின் கேஸ்பர் ரூட் 7-6 (7/3), 7-5, 7-5 என்ற செட்களில் சிலியின் நிகோலஸ் ஜேரியை சாய்த்து காலிறுதிக்கு வந்துள்ளார்.

**சபலென்கா, ஸ்விடோலினா வெற்றி:** மகளிர் ஒற்றையர் பிரிவில், உலகின் 2-ஆம் நிலை வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலென்கா, உக்ரைனின் எலினா ஸ்விடோலினா ஆகியோரும் காலிறுதிக்குவந்துள்ளனர்.

முன்னதாக 4-ஆவது சுற்றில், சபலென்கா 7-6 (7/5), 6-4 என்ற செட்களில் அமெரிக்காவின் ஸ்லோன் ஸ்டீபன்ஸை சாய்த்தார். அடுத்ததாக காலிறுதியில் அவர், உக்ரைனின் எலினா ஸ்விடோலினாவை சந்திக்கிறார்.

ஸ்விடோலினா 6-4, 7-6 (7/5) என்ற செட்களில், போட்டித்தரவரிசையில் 9-ஆம் இடத்திலிருந்த ரஷியாவின் டரியா கசாட்கினாவை தோற்கடித்து அசத்தினார். மற்றொரு காலிறுதியில் பிரேஸிலின் பீட்ரிஸ் ஹட்டாட் - டுனிசியாவின் ஆன்ஸ் ஜபியுர் ஆகியோர் சந்தித்துக் கொள்கின்றனர்.

4-ஆவது சுற்றில், போட்டித்தரவரிசையில் 14-ஆவது இடத்திலிருக்கும் பீட்ரிஸ் 6-7 (3/7), 6-3, 7-5 என்ற செட்களில் ஸ்பெயினின் சாரா சொரைப்ஸை சாய்த்தார். போட்டித்தரவரிசையில் 7-ஆம் இடத்திலிருக்கும் ஜபியுர் 6-3, 6-1 என அமெரிக்காவின் பெர்னார்டா பெராவை வீழ்த்தினார்.







EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

## ஜூனியர் ஹாக்கி: இந்தியாவுக்கு 2–ஆவது வெற்றி



ஆட்டத்தில் இந்திய – மலேசிய வீராங்கனைகள்.

**ககாமிகாரா, ஜூன் 5:** ஜப்பானில் நடைபெறும் ஜூனியர் மகளிர் ஆசி
கோப்பை ஹாக்கி போட்டியில் இந்தியா 2–1 கோல் கணக்கில் மலே
யாவை திங்கள்கிழமை சாய்த்தது.

முதல் ஆட்டத்தில் உஸ்பெகிஸ்தானை சாய்த்திருந்த இந்தியாவுக்
போட்டியில் இது 2–ஆவது வெற்றியாகும். இதையடுத்து குரூப் 'ஏ'–வி
இந்தியா முதலிடத்தில் இருக்கிறது.

முன்னதாக, இந்த 2–ஆவது ஆட்டத்தில் ஆக்ரோஷமாக ஆடிய இ
தியாவுக்கு தொடக்க நிலையிலேயே 2 பெனால்ட்டி கார்னர் வாய்ப்
கள் கிடைத்தும், அதை கோலாக மாற்றத் தவறினர் இந்திய வீராங்கனை
கள். மறுபுறம், மலேசிய அணி 6–ஆவது நிமிஷத்திலேயே கோலடித்
இந்தியாவுக்கு நெருக்கடியளிக்கத் தொடங்கியது. அந்த அணிக்கா
டியான் நஸேரி ஃபீல்டு கோல் அடித்தார்.

எனினும் மலேசியாவின் முன்னிலையை நீடிக்க விடாத வகையில்
இந்தியாவுக்கு 10–ஆவது நிமிஷத்தில் கிடைத்த பெனால்ட்டி கா
னர் வாய்ப்பில் மும்தாஸ் கான் கோலடித்து ஆட்டத்தை சமன் செ
தார். தொடர்ந்து 26–ஆவது நிமிஷத்தில் இந்தியாவுக்கு கிடைத்
பெனால்ட்டி ஸ்ட்ரோக் வாய்ப்பில் தீபிகா கோலடிக்க, இந்தியா முன்
னிலை பெற்றது. எஞ்சிய நேரத்தில் மலேசியாவின் அதிரடியான
கோல் முயற்சிகளுக்கும் அரண் போட்டு தடுத்த இந்தியா, இறுதி
யில் 2–1 கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தியா அடுத்ததாக, குரூப் சுற்றின் 3–ஆவது ஆட்டத்தில்
தென் கொரியாவை செவ்வாய்க்கிழமை சந்திக்கிறது.

EVA STALIN IAS ACADEMY

## துப்பாக்கி சுடுதல்: தனுஷுக்கு தங்கம்




**சுல், ஜூன் 5:** ஜெர்மனியில் நடைபெறும் ஜூனியர் உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதல் போட்டியில் இந்தியாவின் தனுஷ் ஸ்ரீகாந்த் திங்கள்கிழமை தங்கப் பதக்கம் வென்றார். அத்துடன், ஹர்மெஹர் லாலி/சஞ்சனா சூத் இணைக்கு வெண்கலப் பதக்கம் கிடைத்தது.

இதையடுத்து, பதக்கப் பட்டியலில் இந்தியா தற்போது 3 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் என 6 பதக்கங்களுடன் முதலிடத்தில் இருக்கிறது.

ஆடவருக்கான 10 மீட்டர் ஏர் ரைஃபிள் தனிநபர் பிரிவு தகுதிச்சுற்றில், இந்தியாவின் பிரதம் பதனா 628.7 புள்ளிகளுடன் 5-ஆம் இடமும், தனுஷ் 628.4 புள்ளிகளுடன் 6-ஆம் இடமும், அபினவ் ஷா 626.7 புள்ளிகளுடன் 8-ஆம் இடமும் பிடித்து இறுதிச்சுற்றுக்கு தகுதிபெற்றனர். 24 ஷாட்கள் கொண்ட இறுதிச்சுற்றில் சிறப்பாக செயல்பட்ட தனுஷ், 249.4 புள்ளிகளுடன் முதலிடம் பிடிக்க, ஸ்வீடனின் பான்டஸ் காமின் வெள்ளியும், பிரான்ஸின் ரோமெய்ன் அவ்ஃப்ரெர் வெண்கலமும் வென்றனர். பிரதம் 4-ஆம் இடமும், அபினவ் 7-ஆம் இடமும் பிடித்து பதக்க வாய்ப்பை இழந்தனர்.

ஸ்கீட் கலப்பு அணிகள் பிரிவு இறுதிச்சுற்றில் 2 இந்திய ஜோடிகள் பங்கேற்றன. இதில் ரிது ராஜ் புந்தேலா/ ராய்ஸா தில்லன் இணை 134 புள்ளிகளுடன் 7-ஆம் இடம் பிடித்தது. ஹர்மெஹர் லாலி/சஞ்சனா சூத் கூட்டணி வெண்கலப் பதக்கச் சுற்றில் ஸ்வீடனின் டேவிட் ஜான்சன்/ஃபெலிசியா ராஸ் ஜோடியை சந்தித்தது. அதில் 48 இலக்குகள் முடிவில் இரு தரப்புமே 37 புள்ளிகளுடன் சமநிலையில் இருக்க, வெற்றியாளரை தீர்மானிக்க 'ஷூட் அவுட்' நடத்தப்பட்டது. அதில் ஹர்மெஹர்/சஞ்சனா கூட்டணி வென்றது.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# ஆசிய தடகளம்: சித்தார்த் சௌதரி முதலிடம்

**யெசியான், ஜூன் 5:** தென் கொரியாவில் நடைபெறும் 20 வயதுக்கு உள்பட்டோருக்கான ஆசிய தடகள சாம்பியன்ஷிப்பில், ஆடவர் குண்டு எறிதலில் இந்தியாவின் சித்தார்த் சௌதரி திங்கள்கிழமை தங்கப் பதக்கம் வென்றார்.

அவர் தனது சிறந்த முயற்சியாக 19.52 மீட்டருக்கு குண்டு எறிந்து முதலிடம் பிடித்ததுடன், புதிய பெர்சனல் பெஸ்டையும் பதிவு செய்தார். முன்பு அவரது பெர்சனல் பெஸ்ட் 19.11 மீட்டராக இருந்தது.

ஈட்டி எறிதல் பிரிவில் ஷிவம் லொஹாகேர்சிறந்தமுயற்சியாக 72.34 மீட்டரை எட்டி வெள்ளிப் பதக்கம் பெற்றார். ஆடவருக்கான 3,000 மீட்டர் ஸ்டீபிள்சேஸில் ஷாருக் கான் 8 நிமிஷம் 51.74 விநாடிகளில் இலக்கை எட்டி 2-ஆவது இடம் பிடித்தார். மகளிருக்கான நீளம் தாண்டுதலில் சுஷ்மிதா 5.96 மீட்டரை தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்றார்.



4*400 மீட்டர் ரிலே ஓட்டத்தில் தீபக் சிங், அனுஷ்கா கும்பார், நவ்பிரீத் சிங், ரிஸோவானா மாலிக் அடங்கிய இந்திய அணி 3 நிமிஷம் 30.12 விநாடிகளில் இலக்கை எட்டி 3-ஆவது இடம் பிடித்தது. அதேபோல், ஆடவருக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் ஷகீல் 1 நிமிஷம் 49.79 விநாடிகளில் வந்து 3-ஆம் இடம் பிடித்தார்.

இதையடுத்து இப்போட்டியில் இந்தியா இதுவரை வென்ற பதக்கங்கள் எண்ணிக்கை, 3 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலம் என 9-ஐ எட்டியுள்ளது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# தொடர்ந்து 5-ஆவது ஆண்டாக சென்னை ஐஐடி முதலிடம்

## சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசை வெளியீடு

**புது தில்லி/ சென்னை, ஜூன் 5:** மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டுள்ள சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசையில் சென்னை தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (ஐஐடி) முதலிடம் பெற்றுள்ளது.

இந்தத் தரவரிசையில் சென்னை ஐஐடி தொடர்ந்து 5-ஆவது ஆண்டாக முதலிடம் பெற்றுள்ளது.

நாட்டில் சிறந்து விளங்கும் கல்வி நிறுவனங்களுக்கான என்ஐஆர்எஃப் தரவரிசையை மத்திய கல்வி அமைச்சகம் ஆண்டுதோறும் வெளியிட்டு வருகிறது. 8-ஆவது ஆண்டாக அந்தத் தரவரிசையை கல்வி அமைச்சகம் திங்கள்கிழமை வெளியிட்டது.

அதில், சிறந்த கல்வி நிறுவனங்களுக்கான ஒட்டுமொத்த பிரிவின் கீழ் சென்னை ஐஐடி முதலிடம் பெற்றுள்ளது. ஒட்டுமொத்த பிரிவு தரவரிசையின் முதல் 10 இடங்களில் 7 ஐஐடி-க்கள் இடம்பெற்றுள்ளன. சென்னை, மும்பை, தில்லி, கான்பூர், கரக்பூர், ரூர்கி, குவாஹாட்டி ஆகிய ஐஐடி-க்கள் முதல் 10 இடங்களுக்குள் இடம்பெற்றுள்ளன.

கடந்த ஆண்டு தரவரிசைப் பட்டியலில் 9-ஆவது இடத்தில் இருந்த தில்லி எய்ம்ஸ் நடப்பாண்டில் 6-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 10-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

**பொறியியல் பிரிவின் கீழும் சென்னை ஐஐடி முதலிடம்...** ஒட்டுமொத்த பிரிவில் மட்டுமின்றி, தேசிய அளவிலான சிறந்த பொறியியல் கல்வி நிறுவனங்கள் பட்டியலிலும் சென்னை ஐஐடி 8-ஆவது முறையாக முதலிடம் பிடித்துள்ளது. அதுபோல, சிறந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் பிரிவு மற்றும் புத்தாக்க நிறுவனங்கள் பிரிவின் கீழ் 2-ஆம் இடத்தை சென்னை ஐஐடி பிடித்துள்ளது.

சிறந்த பொறியியல் கல்லூரிகள் தரவரிசையில் சென்னை ஐஐடிக்கு அடுத்தபடியாக தில்லி, மும்பை, கான்பூர், ரூர்கி, கரக்பூர், குவாஹாட்டி, ஹைதராபாத் ஐஐடி-க்கள் முதல் 8 இடங்களைப் பிடித்துள்ளன. திருச்சி தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (என்ஐடி) 9-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. ஜாதவ்பூர் பல்கலைக்கழகம் 10-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

**பல்கலைக்கழக தரவரிசை:** சிறந்த பல்கலைக்கழகம்-ஆராய்ச்சி நிறுவனத்துக்கான பட்டியலில் பெங்களூரு இந்திய அறிவியல் மையம் (ஐஐஎஸ்சி) முதலிடம் வகித்துள்ளது. ஜவாஹர்லால் நேரு பல்கலைக்கழகம் 2-ஆவது இடத்தையும் ஜாமியா மிலியா இஸ்லாமியா பல்கலைக்கழகம் 3-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. கடந்த ஆண்டும் இந்தப் பட்டியலில் இதே பல்கலைக்கழகங்களே முதல் 3 இடங்களையும் பிடித்திருந்தன.

கடந்த ஆண்டில் 6-ஆவது இடத்தில் இருந்த பனாரஸ் ஹிந்து பல்கலைக்கழகம், நடப்பாண்டில் 5-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. மணிபால் அகாதெமி, கோவை அமிர்தா விஸ்வ வித்யாபீடம், கொல்கத்தா பல்கலைக்கழகம், வேலூர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம், ஹைதராபாத் பல்கலைக்கழகம் ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

**மாநிலக் கல்லூரி மூன்றாமிடம்:** சிறந்த கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் மிராண்டா ஹவுஸ் முதலிடத்தையும், ஹிந்து கல்லூரி இரண்டாவது இடத்தையும், சென்னை மாநிலக் கல்லூரி மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன.

சிறந்த மேலாண்மைக் கல்லூரிகளுக்கான பட்டியலில் அகமதாபாத் ஐஐஎம் முதலிடத்தையும், பெங்களூரு ஐஐஎம் 2-ஆவது இடத்தையும், கோழிக்கோடு ஐஐஎம் 3-ஆவது இடத்தையும் பெற்றுள்ளன. கடந்த ஆண்டு பட்டியலில் 3-ஆவது இடத்தில் இருந்த கொல்கத்தா ஐஐஎம் நடப்பாண்டில் 4-ஆவது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது.

**மருத்துவக் கல்லூரிகள்...** மருத்துவக் கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தில்லி எய்ம்ஸ் முதலிடத்தையும் சண்டீகர் பிஜிஐஎம்இஆர் 2-ஆவது இடத்தையும், வேலூர் கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (சிஎம்சி) 3-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. கடந்த ஆண்டிலும் அவை முதல் 3 இடங்களை பிடித்திருந்தன. பல் மருத்துவக் கல்லூரிகளுக்கான பட்டியலில் சவீதா மருத்துவக் கல்வி நிறுவனம் முதலிடத்தையும், மணிபால் கல்லூரி 2-ஆவது இடத்தையும், டி.ஒய்.பாட்டீல் வித்யாபீடம் 3-ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

**முதல் 100 இடங்களில் 18 தமிழக கல்வி நிறுவனங்கள்:** இந்தத் தரவரிசையில் பல்வேறு பிரிவுகளின் கீழ் முதல் 100 இடங்களில் தமிழகத்தைச் சேர்ந்த 18 கல்வி நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. அதன் விவரம்:

இந்தியாவின் ஒட்டுமொத்த சிறந்த கல்வி நிறுவனங்கள் பிரிவின் கீழ் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் 18-ஆவது இடம் பெற்றுள்ளது. சிறந்த கல்லூரிகள் பட்டியலில் கோவை பி.எஸ்.ஜி.ஆர்.கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி 4-ஆவது இடமும், சென்னை லயோலா கல்லூரி 7-ஆவது இடமும் பிடித்துள்ளன.

கட்டட வரைவியல் திட்டமிடல் சார்ந்த சிறந்த உயர்கல்வி நிறுவனங்கள் பட்டியலில் திருச்சி என்ஐடி 4-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

வேளாண் படிப்புகளை வழங்கும் சிறந்த பல்கலைக்கழகங்கள் பட்டியலில் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் 5-ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

சிறந்த பல்கலைக்கழகங்களுக்கான பட்டியலில் கோவை அமிர்தா விஸ்வ வித்யாபீடம் 7-ஆவது இடமும், வேலூர் வி.ஐ.டி 8-ஆவது இடமும் பெற்றுள்ளன.

உயர் கல்வி நிறுவனங்களிடையே ஆரோக்கியமான போட்டியை உருவாக்கி, உலகத் தரத்திலான கல்வி நிறுவனங்களாக உயர்த்தும் நோக்கில் கல்வி கற்பித்தல், கல்வி கற்றல் வாய்ப்புகள், ஆராய்ச்சி உள்ளிட்டவற்றின் அடிப்படையில் இந்தத் தரவரிசைப் பட்டியலை மத்திய கல்வி அமைச்சகம் வெளியிட்டு வருகிறது.



EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# உக்ரைனின் எதிர்த் தாக்குதல் முறியடிப்பு: ரஷியா அறிவிப்பு

**கீவ், ஜூன் 5:** உக்ரைனில் தங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள இரு மாகாணங்களில் அந்த நாட்டுப் படை நடத்திய மிகப் பெரிய எதிர்த் தாக்குதலை முறியடித்ததாக ரஷியா திங்கள்கிழமை அறிவித்தது.

இது குறித்து ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

டொனட்ஸ்க் பிராந்தியத்தின் 5 நிலைகள் மீது உக்ரைன் படையினர் பெரிய அளவிலான எதிர்த் தாக்குதலில் ஞாயிற்றுக்கிழமை ஈடுபட்டனர்.

போர் முனையில் மிகவும் பலவீனமான ரஷிய படைப் பிரிவுகள் மீது தாக்குதல் நடத்தி பாதுகாப்பைக் குலைக்கும் நோக்கில் எதிரிப் படையினர் தாக்குதல் வியூகம் வகுத்தனர்.

எனினும், தங்களது இலக்குகளை எதிரிகளால் அடைய முடியவில்லை.

உக்ரைனின் எதிர்த் தாக்குதலை ரஷிய படையினர் முறியடித்தனர் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷியாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மற்றுமொரு பிராந்தியமான ஸபோரிஷியாவிலும் உக்ரைன் படையினர் நடத்திய எதிர்த் தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அந்தப் பிராந்தியத்தில் ரஷியாவால் நியமிக்கப்பட்ட ஆளுநர் விளாதிமீர் ரொகொவ் கூறினார்.

ரஷியப் பாதுகாப்பை உடைத்து 400 மீட்டர் வரை உக்ரைன் படையினர் முன்னேறியதாகவும், ரஷியா கொடுத்த பதிலடி காரணமாக அந்தப் படையினர் மீண்டும் பின்வாங்கிச் சென்றதாகவும் அவர் கூறினார்.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைந்தால், அது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷியா கூறி வருகிறது.

இருந்தாலும், நேட்டோவில் இணைய அதிபர் ஸெலென்ஸ்கி ஆர்வம் காட்டி வந்ததையடுத்து, உக்ரைன் மீது ரஷியா கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் படையெடுத்தது.



இந்தப்போரில்உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிப் பிராந்தியங்களில் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியுள்ள ரஷியா, தங்களுடன் இணைத்துக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், ஸபோரிஷியா, கெர்சான் ஆகிய பிராந்தியங்களில் உக்ரைன்வசமிருக்கும்எஞ்சியபகுதிகளையும் கைப்பற்றும் முயற்சியில் உள்ளது.



உக்ரைனின் ராணுவ தளவாடங்கள் தாக்கி அழிக்கப்பட்டதாகக் கூறி ரஷியா திங்கள்கிழமை வெளியிட்ட விடியோ.

இந்த நிலையில், ஏற்கெனவே எதிர்த் தாக்குதல் நடத்தி சில பகுதிகளை ரஷியாவிடமிருந்து மீட்ட உக்ரைன் படையினர், ரஷிய படையினருக்கு எதிரான மிகப் பெரிய எதிர்த் தாக்குதலை நடத்த ஆயத்தமாகி வருவதாக தகவல்கள் வெளியாகி வந்தன.

எதிர்த் தாக்குதல் நடவடிக்கையை தாங்கள் எப்போது வேண்டுமானாலும் தொடங்கலாம் என்று உக்ரைன் அரசும் அண்மையில் அறிவித்திருந்தது.

## '250 உக்ரைனியர்கள் பலி'

ஆக்கிரமிப்புப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை எதிர்த் தாக்குதல் நடத்திய உக்ரைன் படையினரில் சுமார் 250 பேர் தங்களது பதிலடித் தாக்குதலில் உயிரிழந்ததாக ரஷியா கூறியது.

இது குறித்து 'இன்ஸ்டாகிராம்' வலைதளத்தில் ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், 'ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மோதலில் 250 உக்ரைன் படை வீரர்கள் கொல்லப்பட்டனர்; உக்ரைனுக்குச் சொந்தமான16 பீரங்கிகள், 3 தரைப் படை வாகனங்கள், 21 கவசவாகனங்கள் அழிக்கப்பட்டன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது தொடர்பான விடியோவையும் ரஷிய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது.



உக்ரைன் படையினர் (கோப்புப் படம்).

## 'பாக்முத் தோல்வியை மறைக்க'



ஹன்னா மலியன்

**கீவ், ஜூன் 5:** பாக்முத் பகுதியில் தங்களது படையினருக்கு ஏற்பட்டுள்ள பின்னடைவை மறைப்பதற்காக, உக்ரைன் படையினரின் எதிர்த் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்ற பொய்யான தகவலை ரஷியா பரப்பி வருவதாக உக்ரைன் குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து உக்ரைன் பாதுகாப்புத் துறை இணையமைச்சர் ஹன்னா மலியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'போர் தொடங்கிய கடந்த ஆண்டின் பிப்ரவரி 24-ஆம் தேதியிலிருந்தே உக்ரைனைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எங்களது படையினர் மேற்கொண்டு வருகின்றனர். அந்த நடவடிக்கைகளில் எதிர்த் தாக்குதல்களும் அடங்கும்.

ஆனால், பாக்முத் நகரில் தாங்கள் அடைந்து வரும் தோல்விகளிலிருந்து உலகின் கவனத்தை திசை திருப்புவதற்காகவே இது போன்ற எதிர்த் தாக்குதல் தகவல்களை ரஷியா வெளியிட்டு வருகிறது' என்று குறிப்பிட்டுள்ளார்.

EVA STALIN IAS ACADEMY

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# சேவைகள் துறையில் 2–ஆவது பெரிய வளர்ச்சி

**புது தில்லி, ஜூன் 5:** கடந்த ஏப்ரல் மாதத்தில் 13 ஆண்டுகள் காணாத வளர்ச்சியைக் கண்ட இந்தியாவின் சேவைகள் துறை, மே மாதத்தில் 2–ஆவது பெரிய வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இதற்கு முன்னர் கடந்த பிப்ரவரி மாதத்தில் அது 12 ஆண்டுகள் காணாத வளர்ச்சியைக் கண்டது.

இது குறித்து சந்தை ஆய்வு நிறுவனமான 'எஸ் அண்ட் பி குளோபல் மார்க்கெட் இன்டெலிஜென்ஸ்' திங்கள்கிழமை வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சேவைகள் துறையில் தொழில் நடவடிக்கைகளுக்கான குறியீட்டு எண்ணான பிஎம்ஐ, கடந்த நவம்பர் மாதத்தில் 56.4–ஆக அதிகரித்தது. இது அதற்கு முந்தைய 3 மாதங்கள் காணாத அதிபட்ச அளவாகும்.



டிசம்பர் மாதத்திலும் பிஎம்ஐ 58.5–ஆக உயர்ந்தது. அது, கடந்த 6 மாதங்களில் இல்லாத அதிகபட்ச அளவாக இருந்தது.

எனினும், கடந்த ஜனவரி மாதத்தில் பிஎம்ஐ குறியீட்டு எண் 57.2–ஆக குறைந்தது.

ஆனால், பிப்ரவரி மாதத்தில் சேவைகள் துறைக்கான பிஎம்ஐ 59.4–ஆக அதிகரித்தது.

அது, கடந்த 12 ஆண்டுகள் காணாத அதிகபட்ச எண்ணாகும். எனினும், மார்ச் மாதத்தில் அது மீண்டும் 57.8–ஆக குறைந்தது.

எனினும், கடந்த ஏப்ரல் மாதத்தில் சேவைகள் துறைக்கான பிஎம்ஐ கடந்த 13 ஆண்டுகளில் இல்லாத அதிகபட்சமாக 62.0–ஆக உயர்ந்தது. இந்த நிலையில், கடந்த மே மாதத்தில் அது 61.2–ஆக குறைந்தது. இது கடந்த 13 ஆண்டுகளில் 2–ஆவது அதிக சேவைகள் துறை பிஎம்ஐ ஆகும்.

இது, சேவைகள் துறையின் மிதமான மற்றும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எடுத்துக்காட்டுகிறது.

இதன்மூலம், தொடர்ந்து 22–ஆவது மாதமாக பிஎம்ஐ குறியீட்டு எண் நடுநிலை வரம்பான 50–க்கும் மேலே உள்ளது.

அந்தக் குறியீட்டு எண் 50–க்கு மேல் இருப்பது சேவைகள் துறையின் ஆரோக்கியமான போக்கையும், 50–க்கு குறைவாக இருந்தால் பின்னடைவையும் குறிக்கிறது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

EVA STALIN IAS ACADEMY